# தேசிய தமிழ் நாளிதழ்களில் தெற்கு அரசியல் பற்றிய கேலிச்சித்திரங்கள்

இராமநாதன் ஜெயந்தன்,[1] சிவசுப்பிரமணியம் ரகுராம்[2]

[1]ஊடகக்கற்கைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[2]ஊடகக் கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*jenthan313@gmail.com [1], ragunadu2003@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருகம் –** தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெருமளவாக காணப்படுகின்றனர். நாட்டு நடப்புக்கள், விவகாரங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு பிராந்திய ஊடகங்களை அவர்கள் தங்கியிருந்தாலும் தென்னிலங்கை தொடர்பான அரசியல் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ள கொழும்பிலிருந்து வெளியாகும் தேசிய தமிழ்ப்பத்திரிகைகளையேநம்பியிருக்கவேண்டியநிலைகாணப்படுகின்றது. தேசிய தமிழ்ப் பத்திரிகைகளில் தென்னிலங்கை தொடர்பிலான அரசியல் விடயங்களை வெளிப்படுத்துவதில் கேலிச்சித்திரங்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. எனவே, கேலிச்சித்திரங்கள் வாயிலாக தெற்கு அரசியல் முன்வைக்கப்படும் விதம் குறித்து ஆராய்வதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில், 'தேசிய தமிழ் நாளிதழ்களில் தெற்கு அரசியல் பற்றிய கேலிச்சித்திரங்கள்' என்னும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டதுடன், தேசிய ரீதியில் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவருகின்ற கேலிச்சித்திரங்களானவை தென்னிலங்கை அரசியலை முன்வைக்கும் விதம் தொடர்பாக ஆராய்வதாக அமைகின்றது. தெற்கு அரசியல் சார் விடயங்களை கேலிச்சித்திரங்கள் முன்வைக்கும் விதம், கேலிச்சித்திரங்களில் கையாளப்படும் குறியீடுகளின் தன்மைகளை இனங்காணல், தெற்கு அரசியல் நிலைப்பாடுகள் குறித்து கேலிச்சித்திரங்களின் விமர்சனப்பார்வை எவ்வாறுள்ளது. போன்ற விடயங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ் ஆய்வானது உள்ளடக்கப்பகுப்பாய்வு முறையினை அடிப்படையாக கொண்டு ஒரு மாதகாலத்தில் வெளியான தேசிய தமிழ்ப் பத்திரிகைகளிலிருந்து கேலிச்சித்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. கேலிச்சித்திர வரைகலைஞர்களிடமிருந்து நேர்காணல்கள் பெறப்பட்டு அவையும் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு கேலிச்சித்திரங்களின் பேசுபொருட்களாக அரசியல், பொருளாதாரம், சமூகம், இன நல்லிணக்கம் போன்ற விடயங்கள் காணப்பட்டாலும் அரசியல் குறித்த கேலிச்சித்திரங்களே தேசிய தமிழ் நாளிதழ்களில் அதிகமாக இடம்பெறுவதும், அங்க அடையாளக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் சார்ந்த குறியீடுகள் அடிப்படையில் வரையப்பட்ட கேலிச்சித்திரங்களே அதிகம் என்பதும், கேலிச்சித்திரங்கள் விமர்சன நோக்கம், ஊழல்களினை வெளிப்படுத்தல், பிரச்சினைகளை வெளிப்படுத்துதல், தேசிய நலனை முன்னிலைப்படுத்தல் போன்ற பல வெளிப்படுத்தல்களை கொண்டிருந்தாலும், அரசியல் தொடர்பான விமர்சன நோக்கம் கொண்டவையாகவே அவை அதிகம் வெளிவருகின்றன என்பதும், கருத்துருவாக்கம் செய்யும் நோக்கத்துடனேயே கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்றன என்பதுடன் கருத்துருவாக்கத்தின் மூலமாக பத்திரிகையின் நிலைப்பாட்டை வெளிக்கொண்டு வருவதில் கேலிச்சித்திரங்களுக்கு அதிக பங்கு இருக்கின்றது என்பதும், கேலிச்சித்திரங்களில் அரசியல் விவகாரங்கள் அதிகம் விமர்சனப்பார்வையுடன் வரையப்பட்டு வெளியிடப்படுகின்ற அதேவேளை, இற்றைப்படுத்தப்படும் தகவல்களை மக்களுக்கு தெரிவிக்கும்விதமாகவும் கேலிச்சித்திரங்கள் வெளிவருகின்றன என்பதும் ஆய்வின் முடிவுகளாகக் கண்டறியப்பட்டன.

**திறவுச் சொற்கள் –** தேசிய தமிழ்ப் பத்திரிகைகள், அரசியல் கேலிச்சித்திரங்கள், தெற்கு அரசியல்.

## I. அறிமுகம்

கார்ட்டூன் (Cartoon) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கேலிச்சித்திரங்கள் நகைச்சுவையை தூண்டும் வகையில் வரையப்படும் சித்திரங்கள் ஆகும். பல நூறு சொற்களில், வரிகளில் உணர்த்த முடியாததைக் கேலிச்சித்திரங்கள் எளிதாக உணர்த்தி விடுகின்றன. அரசியல், பொருளாதாரம், சமயம், சமுதாயம் எனப் பல துறைகளில் இடம் பெறுகின்ற குறைகள், ஊழல்கள் போன்றவற்றை நகைச்சுவையுடன் உணர்த்தும்படி கேலிச்சித்திரங்கள் அமைகின்றன.

கேலிச்சித்திரங்கள் மூன்று வகைகளில் பயன் படுத்தப்படுகின்றன. ஒன்று, ஒரு நபரையோ அல்லது செயலையோ கேலி செய்வது. இரண்டாவது, ஒரு நபரையோ அல்லது செயலையோ புகழ்வது. மூன்றாவது, மக்களின் உணர்ச்சியைத் தூண்டுவது. இவ்வாறு மூன்று வகைகளில் கேலிச்சித்திரங்கள் பயன்படுத்தப்பட்டாலும், பெருமளவில் கேலி செய்வதனை நோக்காகக்கொண்டே இவை வெளிவருகின்றன. கார்ட்டூன் என்ற ஆங்கிலச் சொல் (Cartoon) அதன் மூலச் சொல்லாகிய Cartone என்ற இத்தாலியச் சொல்லிலிருந்து பிறந்தது. கார்ட்டூன் (Cartone) எனப்படுவது காகிதம் என அர்த்தப்படும். இன்று தமிழில் கார்ட்டூனை கேலிச்சித்திரம் என்றோ அல்லது கருத்து ஓவியம் என்றோதான் பொதுவாக அழைக்கின்றனர்[1].

கேலிச்சித்திரங்கள் பொழுதுபோக்குச் சித்திரங்கள், கருத்துச் சித்திரங்கள் என இரு வகைப்படுகின்றன. பொழுதுபோக்குச் சித்திரத்தில் அதன் விளக்கம் சுருக்கமாக வெளிக்காட்டப்படுகின்றது. கருத்துச் சித்திரங்கள் பெரும்பாலும் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களைப் பற்றிப் பேசுகின்றன. கேலிச்சித்திரங்கள் ஒரே ஒரு கருத்தைத்தான் கூறும். அது வாசகர் மனங்களில் பதிவது என்பது அதை வரையும் விதத்தைப் பொறுத்ததாகும்[2].

கேலிச்சித்திரங்களானவை பலதரப்பட்ட உள்ளடக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

கேலிச்சித்திரங்கள் வெறுமனே நகைச்சுவைக்காக மட்டும் வரையப்படுபவை அல்ல. மாறாக, அவை பல நோக்கங்களுக்காகவும் பலதரப்பட்ட பேசுபொருட்களின் அடிப்படையிலேயே வரையப்பட்டு வெளியிடப்படுகின்றன. இன்று பத்திரிகைச் சுதந்திரம் ஓரளவிற்கு இருந்தாலும் கூட, சகல விடயங்களையும் வெளிப்படையாக எழுதுவதென்பது சாதாரண விடயமல்ல. நடப்பு விடயங்கள் தொடர்பில் கேலிச்சித்திரங்களின் வெளிப்பாடு என்பது அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதாக அமைந்து விடுகின்றது[3].

பத்திரிகை ஆசிரியர் தனது கருத்தை ஆசிரியர் தலையங்கம் மூலமாக வெளிப்படுத்துவார். அதை ஓவியர் கேலிச்சித்திரங்கள் வாயிலாக வாசகர் மனங்களில் பதியும்படி செய்கின்றார்[4].

கேலிச்சித்திர ஓவியர் குறிப்பிட்ட அரசியல் சம்பவத்தை புராணக்கதைகளுடனோ அல்லது பழமொழிகளுடனோ தொடர்புபடுத்தி சித்திரிப்பதன் மூலம் தமது அபிப்பிராயத்தைப் பயனுள்ள முறையில் சுருக்கமாகச் சொல்லிவிட முடியும். அவ்வாறு சொல்லப்படும் கருத்துக்கள் வாசகர் மனங்களில் நன்றாகப் பதிந்துவிடும்[5].

**II. ஆய்வு முறையியல்**

பத்திரிகைகளில் அரசியல், பொருளாதாரம், சமூகம், மதம் சார்ந்த தகவல்களை கேலிச்சித்திரங்களினூடாக வெளியிடுவதில் பத்திரிகைகள் முனைப்புக் காட்டி வருகின்றன. அந்த வகையில் கேலிச்சித்திரங்கள் தொடர்பான இவ் ஆய்வானது அதனுடைய முக்கியத்துவம், பேசுபொருள் போன்ற தன்மைகளை அறிந்து கொள்வதற்கு அவசியமாகின்றது.

இன்று இலங்கையிலிருந்து வெளியாகின்ற பத்திரிகைகளில் பெரும்பாலானவற்றில் கேலிச்சித்திரங்களின் தாக்கத்தை அதிகளவில் காணமுடிகின்றது. சிங்களப் பத்திரிகைகளில், ஆங்கிலப் பத்திரிகைகளில், தமிழ்ப் பத்திரிகைகளில் கேலிச்சித்திரங்கள் தொடர்ச்சியாக வெளிவருவதனைக் காணமுடிகின்றது. ஆனாலும் தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் பிராந்தியப் பத்திரிகைகளில் கேலிச்சித்திரங்கள் வெளியிடப்படுகின்றபோதும், அவை ஒரே சீரான தொடர்ச்சியில் வெளியிடப்படுவதில்லை.

ஆயினும், தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி போன்றவற்றில் கேலிச்சித்திரங்களுக்கு முக்கிய இடங்கொடுக்கப்பட்டு, அவை தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தென் இலங்கை அரசியல் விடயங்களை தமிழ்மக்கள் தேசிய தமிழ்ப் பத்திரிகைகளின் மூலமாகவே அதிகம் அறிந்து கொள்கின்றனர். இங்கு கேலிச்சித்திரங்களானவை அதிகளவில் தெற்கு அரசியலையே பிரதான பேசுபொருளாகக் கொண்டு வெளிவருவதனால் தேசியப் பத்திரிகைகள் இந்த ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவ் ஆய்வினூடாக - தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் கேலிச்சித்திரங்கள் ஊடாக தெற்கு அரசியல் சார்ந்த விடயங்களை முன்வைக்கும் விதம், குறித்த அரசியல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்த தேசிய அளவில் வெளியிடப்படுகின்ற தமிழ்ப் பத்திரிகைகளின் கேலிச்சித்திரங்களில் கையாளப்படுகின்ற குறியீடுகளின் தன்மை, தெற்கு அரசியல் தொடர்பாக கேலிச்சித்திரங்கள் எவ்வாறான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளன என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் தீர்ப்பாயப்படுத்தப்பட்ட மாதிரித் தெரிவுமுறையினை அடிப்படையாகக் கொண்டு - தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளின் 01.08.2016 தொடக்கம் 31.08.2016 வரையிலான ஒரு மாத காலப்பகுதியில் வெளிவந்த 93 பத்திரிகைகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.

ஆய்வினுடைய கருதுகோள்களாக - பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்தின் கருத்திற்கமைவாகவே கேலிச்சித்திரங்கள் வடிவமைக்கப்படுகின்றன, குறித்த கட்சி சார்ந்த அரசியல் தலைவர்களே குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது சகாக்களையும் இலக்காகக் கொண்டே கேலிச்சித்திரங்கள் அதிகம் வரைந்து வெளியிடப்படுகின்றன, அரசியல் ரீதியிலான விடயங்களில் விமர்சன நோக்கம் கொண்டதாகவே கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டு வெளியிடப்படுகின்றன என்பன முன்வைக்கப்பட்டன.

இவ் ஆய்விற்கு முதல்நிலை தகவல் திரட்டும் கருவிகளாக, ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்ட பத்திரிகைகளில் வெளிவந்த கேலிச்சித்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அத்துடன், தேசியளவில்

வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகளின் கேலிச்சித்திர வரைகலைஞர்களிடமிருந்து நேர்காணல்களின் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டாம் நிலைத் தகவல்களாக, கேலிச்சித்திரங்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகள், கட்டுரைகள், நூலகள் என்பன எடுத்துக்கொள்ளப்பட்டன.

உள்ளடக்கப் பகுப்பாய்வின்படி, எண்சார் மற்றும் பெறுதி சார் ஆய்வு முறையியல்களுக்கூடாக கேலிச் சித்திரங்களின் உள்ளடக்கங்கள், கருத்துக்கள், பண்புகள் போன்றன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## III. ஆய்வின் பேறுகளும் கலந்துரையாடலும்

தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் 01.08.2016 தொடக்கம் 31.08.2016 வரையிலான ஒரு மாத காலப்பகுதியில் வெளிவந்த பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேலிச்சித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு 'தேசிய தமிழ் நாளிதழ்களில் தெற்கு அரசியல் பற்றிய கேலிச்சித்திரங்கள்' என்ற தலைப்பின் கீழ் கேலிச்சித்திரங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் முடிவுகள் பின்வருமாறு அளிக்கை செய்யப்பட்டன.

### கேலிச்சித்திர கதாபாத்திரம்

அரசியலில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான நபர்களைப் பிரதிபலிப்பதாக வரையப்பட்ட கேலிச்சித்திரங்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டபோது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை கேலிச்சித்திரப் பாத்திரமாகக் கொண்டு 19 சதவீதமான கேலிச்சித்திரங்களும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்வைத்து 08 சதவீதமான கேலிச்சித்திரங்களும், ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் 08 சதவீதமான கேலிச்சித்திரங்களும் அமைந்திருக்கக் காணப்பட்டன. ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் நபர்களைப் பிரதிபலிப்பதாக 19 சதவீதமான கேலிச்சித்திரங்களும், பொதுவானவை என 23 சதவீதமான கேலிச்சித்திரங்களும் காணப்பட்டன. இதன்படி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினைக் கேலிச்சித்திரப் பாத்திரமாகக் கொண்டே அதிகமான கேலிச்சித்திரங்கள் தேசிய தமிழ் நாளிதழ்களில் குறித்த காலப்பகுதியில் வெளிவந்தமை கண்கூடானது.

### அரசியல் கட்சிகள் தொடர்பான கேலிச்சித்திரங்கள்

கேலிச்சித்திரங்களானவை ஏதேனும் ஒன்று அல்லது பல அரசியல் கட்சிகளினைப் பிரதிபலிப்பதாகவே வெளிவருகின்றன. இதன்படி, தனித்த கட்சிகளாக, மகிந்த அணி 31 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 08 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், ஐக்கிய தேசியக் கட்சி 15 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், கூட்டுக் கட்சிகளாக எதிர்க்கட்சி 04 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், கூட்டாட்சி அரசாங்கம் 19 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், ஏனையவை 23 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும் இடம்பெற்றன. இதன்படி, மகிந்த அணியைக் கட்சி அடிப்படையில் அதிகம் பிரதிபலிப்பதாகவே தேசிய தமிழ் நாளிதழ்களில் கேலிச்சித்திரங்கள் குறித்த காலப்பகுதியில் வெளிவந்திருந்தன.

### கேலிச்சித்திரங்களின் பேசுபொருள்

கேலிச்சித்திரங்களின் பேசுபொருட்களாக அரசியல், பொருளாதாரம், சமூகம், இன நல்லிணக்கம் போன்ற விடயங்கள் காணப்பட்டன. இதன்படி அரசியல் குறித்த கேலிச்சித்திரங்கள் 61 சதவீதமாகவும், பொருளாதாரம் குறித்த கேலிச்சித்திரங்கள் 08 சதவீதமாகவும், சமூகம் குறித்த கேலிச்சித்திரங்கள் 15 சதவீதமாகவும், இன நல்லிணக்கம் குறித்த கேலிச்சித்திரங்கள் 04 சதவீதமாகவும் அமைந்திருக்கக் காணப்பட்டன. இதன்படி, அரசியல் குறித்த கேலிச்சித்திரங்களே தேசிய தமிழ் நாளிதழ்களில் அதிகமாகக் குறித்த காலப்பகுதியில் வெளிவந்திருந்தன.

### கேலிச்சித்திரங்களின் வகைகள்

கேலிச்சித்திரங்களின் வகைகளை அடிப்படையாக கொண்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தியபோது, பொதுவாகப் பத்திரிகைகளில் வெளிவருகின்ற கேலிச்சித்திரங்கள் மூன்று வகைகளில் வரையப்படுவது கவனத்திற்கொள்ளப்பட்டது. இந்தவகையில், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேலிச்சித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நபரையோ அல்லது செயலையோ கேலிசெய்து வரையப்பட்ட கேலிச்சித்திரங்கள் 65 சதவீதமாகவும், ஒரு நபரையோ அல்லது செயலையோ புகழ்ந்து வரையப்பட்டவை 04 சதவீதமாகவும், மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் வரையப்பட்டவை 31 சதவீதமாகவும் காணப்பட்டன. இதன்படி, ஒரு நபரையோ அல்லது செயலையோ கேலிசெய்து வரையப்பட்ட கேலிச்சித்திரங்களே குறித்த காலப்பகுதியில் அதிகம் தேசிய தமிழ் நாளிதழ்களில் இடம்பெற்றிருந்தன.

**கேலிச்சித்திரங்களில் குறியீடுகள்**

கேலிச்சித்திரங்களில் குறியீடுகளைக் கையாண்டு தகவல்களை வெளிப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. ஒரு நபரையோ அல்லது ஒரு விடயத்தையோ உருவகித்து ஒப்புவிப்பதில் நுட்பமான குறியீடுகள் கையாளப்படுகின்றன. இவ் ஆய்வில் அடையாளம் சார்ந்த குறியீடுகளே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவை நபர்களை, அவர்களின் இயல்புகளை, அங்க அடையாளங்களை, அவர்களது பிரத்தியேக பாவனைப் பொருட்களைக் குறியீடுகளாக வெளிப்படுத்துவதன் மூலமாக குறித்த நபர்களை அடையாளப்படுத்திவிடுகின்றன. இதன்படி உடைகள், உடைமைகள் சார்ந்த குறியீடுகள் 30 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், அங்க அடையாளக் குறியீடுகள் 35 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும், சின்னங்கள் சார்ந்த குறியீடுகள் 35 சதவீதமான கேலிச்சித்திரங்களிலும் இடம்பெற்றிருந்தன. இதன்படி, அங்க அடையாளக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் சார்ந்த குறியீடுகள் அடிப்படையில் வரையப்பட்ட கேலிச்சித்திரங்களே குறித்த காலப்பகுதியில் அதிகம் தேசிய தமிழ் நாளிதழ்களில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கேலிச்சித்திர வெளிப்பாடுகள்**

தேசியளவில் வெளிவரும் தமிழ் நாளிதழ்களில் வெளிவருகின்ற கேலிச்சித்திரங்களைப் பொறுத்த வரையில் அவற்றின் வெளிப்பாடுகளானவை விமர்சன நோக்கம், ஊழல்களினை வெளிப்படுத்தல், பிரச்சினைகளை வெளிப்படுத்துதல், தேசிய நலனை முன்னிலைப்படுத்தல் என்ற அடிப்படையில் வரையப்பட்டு வெளியிடப்படுகின்றன.

ஆந்த வகையில் வீரகேசரி பத்திரிகையினைப் பொறுத்தவரையில் கேலிச்சித்திர வெளிப்பாடுகளில் 43 சதவீதமானவை விமர்சன நோக்கம் கொண்ட கேலிச்சித்திரங்களாகவும், தினகரன் பத்திரிகையினைப் பொறுத்தவரையில் அது 50 சதவீதமாகவும், தினக்குரல் பத்திரிகையினைப் பொறுத்தவரையில் அது 54 சதவீதமாகவும் காணப்பட்டது.

இதன் அடிப்படையில் கேலிச்சித்திரங்கள் விமர்சன நோக்கம், ஊழல்களினை வெளிப்படுத்தல், பிரச்சினைகளை வெளிப்படுத்துதல், தேசிய நலனை முன்னிலைப்படுத்தல் போன்ற பல வெளிப்படுத்தல்களை கொண்டிருந்தாலும், அரசியல் தொடர்பான விமர்சன நோக்கம் கொண்டவையாகவே அவை அதிகம் வெளிவருகின்றமை நிரூபிக்கப்பட்டது. நேர்காணல் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு ஆய்வில் நேர்காணல்கள் மூலமாக பெற்றுக்கொண்ட தரவுகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இவ் நேர்காணல்களில் தினக்குரல் பத்திரிகையின் கேலிச்சித்திர வரைகலைஞர் அம்மையப்பிள்ளை யோகமூர்த்தி, வீரகேசரி பத்திரிகையின் கேலிச்சித்திர வரைகலைஞர் சௌந்தீஸ் தர்மதாஸ், தினகரன் செய்தி ஆசிரியர் அசோக்குமார் ராஜா போன்றோரிடமிருந்து நேர்காணல்கள் பெறப்பட்டு அவை தொடர்பில் வழங்கப்பட்ட பதில்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

கேலிச்சித்திரங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் விடயம். கேலிச்சித்திரங்கள் தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் விடயம் தொடர்பில் மூவரினதும் ஒருமித்த கருத்தாக, நடைமுறை விடயங்களையே கேலிச்சித்திரங்கள் முக்கியத்துவப்படுத்துவது எடுத்துக்காட்டப்பட்டது. ஆசிரியர்பீடக் கருத்துக்களை உள்வாங்குதல். கேலிச்சித்திரங்கள் வரையப்படும்போது ஆசிரியர்பீடக் கருத்துக்களை உள்வாங்குதல் தொடர்பில் - தினக்குரல் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் கேலிச்சித்திர வரைகலைஞர்களின் சுயாதீன சிந்தனையாக கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்ற அதேவேளை, தினகரன் பத்திரிகையில் வெளிவருகின்ற கேலிச்சித்திரங்கள் ஆசிரியர்பீடக் கருத்துக்களையும் உள்வாங்கியே வரையப்படுகின்றமை தெரியவந்தது. கேலிச்சித்திரங்களை வரைதலில் உள்ள மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் கேலிச்சித்திரங்களை வரைதல் தொடர்பான சுதந்திரம், மட்டுப்பாடுகள் தொடர்பான கேலிச்சித்திர வரைகலைஞர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்களினடிப்படையில் தற்போதுள்ள அரசாங்கத்தின் ஆட்சியில் கேலிச்சித்திரங்களின் வாயிலாக கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றன காணப்படுகின்ற அதேவேளை முன்னைய ஆட்சியாளர்களின் காலத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான வரையறைகள், மட்டுப்பாடுகள் இருந்துள்ளமை ஒத்துக்கொள்ளப்பட்டது.

**கேலிச்சித்திரங்களின் கருப்பொருள்**

கேலிச்சித்திரங்களின் கருப்பொருள் தொடர்பாக நேர்காணல்கள் மூலமாக ஆய்வுசெய்தபோது, கேலிச்சித்திரங்களின் கருப்பொருள் தொடர்பாக

வரைகலைஞர்களால் வழங்கப்பட்ட பதில்களின் பிரகாரம் நடப்பு விடயங்களே அவற்றின் கருப்பொருளைத் தீர்மானிப்பனவாக அமைவதாக மீள வலியுறுத்தப்பட்டதோடு, வாசகர்களின் எதிர்பார்க்கைகளின் நிமிர்த்தம் அரசியல்சார்ந்த விடயங்களே அதிகம் கருப்பொருளாக்கப்படுகின்றன என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

**கேலிச்சித்திரங்கள் அரசியலை முன்வைக்கும் விதம்**

அரசியல் விடயங்களைக் கேலிச்சித்திரங்கள் முன்வைக்கும் விதம் தொடர்பாக நேர்காணல்கள் மூலமாக பெற்றுக்கொண்ட தரவுகளினடிப்படையில் ஆராயப்பட்டது. கேலிச்சித்திரங்களில் அரசியல் விவகாரங்கள் அதிகம் விமர்சனப்பார்வையுடன் வரையப்பட்டு வெளியிடப்படுகின்ற அதேவேளை, இற்றைப்படுத்தப்படும் தகவல்களை மக்களுக்கு தெரிவிக்கும்விதமாகவும் கேலிச்சித்திரங்கள் வெளிவருகின்றன. இருந்தாலும், அரசியலை பேசுபொருளாகக் கொண்டு கேலிச்சித்திரங்கள் வெளிவரும்போது அவை பெரும்பாலும் விமர்சன நோக்கம் கொண்டவையாகவே காணப்படுகின்றன என்பது ஆய்வின் ஒரு பேறாகப் பெறப்பட்டது.

**கேலிச்சித்திரங்களின் கருத்துருவாக்கம்**

கேலிச்சித்திரங்களின் கருத்துருவாக்கம் தொடர்பாக வரைகலைஞர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களினடிப்படையில், கருத்துருவாக்கம் செய்யும் நோக்கத்துடனேயே கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்றன எனவும் கருத்துருவாக்கத்தின் மூலமாக பத்திரிகையின் நிலைப்பாட்டை வெளிக்கொண்டு வருவதில் கேலிச்சித்திரங்களுக்கு அதிக பங்கு இருக்கின்றது என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

**IV. ஆய்வு முடிவுகள்**

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மூன்று பத்திரிகைகளிலும் வெளிவந்த கேலிச்சித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது, கேலிச்சித்திர கதாபாத்திரங்களினடிப்படையில் தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதான பாத்திரமாக கொண்டு அதிகளவிலான கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ள அதேவேளை, வீரகேசரி பத்திரிகையில் ஏனைய அரசியல்சார் நபர்களுக்கும் முன்னிலை வழங்கப்பட்டிருந்தது.

மூன்று பத்திரிகைகளிலும் வெளிவந்த கேலிச்சித்திரங்களின் பேசுபொருளாக அரசியல் சார்ந்த விடயங்களே அதிகமாகவுள்ளமை ஆய்வு முடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய மூன்று பத்திரிகைகளும் ஒரு நபரையோ அல்லது செயலையோ கேலிசெய்து வரையும் வகையைச் சார்ந்த கேலிச்சித்திரங்களையே அதிகம் வரைந்து வெளியிடுகின்றன என்பதும்,

தினகரன் பத்திரிகையில் கேலிச்சித்திரங்களில் அங்க அடையாளங்களைப் பிரதிபலிக்கும் குறியீடுகளும், தினக்குரல் பத்திரிகையில் உடைகள், உடைமைகள் சார்ந்த குறியீடுகளும் அதிகளவில் கையாளப்பட்டுள்ள அதேவேளை வீரகேசரிப் பத்திரிகையைப் பொறுத்தவரையில் அங்க அடையாளங்கள் மற்றும் சின்னங்கள் சார்ந்த குறியீடுகளையே கேலிச்சித்திரங்களில் அதிகம் பயன்படுத்தியுள்ளமை ஆய்வின் முடிவில் தெரியவந்தது.

அதேவேளை கேலிச்சித்திரங்களானவை விமர்சன நோக்கம், ஊழல்களினை வெளிப்படுத்தல், பிரச்சினைகளை வெளிப்படுத்துதல், தேசிய நலனை முன்னிலைப்படுத்தல் போன்ற பல வெளிப்படுத்தல்களைக் கொண்டிருந்தாலும், அரசியல் தொடர்பான விமர்சன நோக்கம் கொண்டவையாகவே அவை அதிகம் வெளிவருகின்றமை குறித்த இவ் ஆய்வின் முடிவில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல் தரவுகளின் பிரகாரம், கேலிச்சித்திரங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் விடயங்கள் தொடர்பில் ஒருமித்த கருத்தாக நடைமுறை சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்றன என்பதும், கேலிச்சித்திர வரைகலைஞர்களின் சுயாதீன சிந்தனைக்கு உட்பட்டதாக கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்ற அதேவேளை தினகரன் பத்திரிகையில் வெளிவருகின்ற கேலிச்சித்திரங்கள் ஆசிரியர்பீடக் கருத்துக்களை உள்வாங்கியே அதிகம் வரையப்படுவதும் உறுதியானது.

அத்துடன், தற்போதுள்ள அரசாங்கத்தின் ஆட்சியில் கேலிச்சித்திரங்கள் வாயிலாக கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்பன காணப்படுகின்ற அதேவேளையில், முன்னைய ஆட்சிக் காலத்தில் ஊடக சுதந்திரம், வரையறைகள், மட்டுப்பாடுகளுடன் இருந்திருந்தமை

ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது. கேலிச்சித்திரங்களில் நடப்பு விடயங்களே அவற்றின் கருப்பொருளைத் தீர்மானிப்பவையாக அமைவதோடு, வாசகர்களின் எதிர்பார்க்கைகளின் நிமிர்த்தம் அரசியல் சார்ந்த விடயங்களும் அதிகம் கருப்பொருளாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. கேலிச்சித்திரங்கள் அதிகம் விமர்சனப் பார்வையுடன் வரையப்பட்டு வெளியிடப்படுகின்ற அதேவேளை தகவல்களை மக்களுக்கு தெரிவிக்கும்விதமாகவும் கேலிச்சித்திரங்கள் வெளியிடப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், அரசியலை பேசுபொருளாகக் கொண்டு வெளிவரும்போது அவை பெரும்பாலும் விமர்சன நோக்கம் கொண்டனவையாகவே காணப்படுகின்றன என்பதும் ஆய்வின் முடிவில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**எதிர்கால ஆய்விற்கான பரிந்துரைகள்**

குறித்த இவ் ஆய்வானது ஒரு மாதகாலப் பகுதியில் வெளிவந்த தேசிய தமிழ் நாளிதழ்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் காலங்களில் இவ் ஆய்வினை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஆய்வுப்பரப்பிற்கு புதியதும் அவசியமானதுமான வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

அந்தவகையில் கேலிச்சித்திரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட குறித்த இவ் ஆய்வானது தமிழ் நாளிதழ்களை மாத்திரமே ஆய்விற்கு எடுத்துக்கொண்டது. எதிர்காலத்தில், மொழி ரீதியிலான வரையறைகளைக் கடந்து சென்று ஆங்கிலமொழிப் பத்திரிகைகள், சிங்கள மொழிப் பத்திரிகைகள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டும் ஆய்வினை மேற்கொள்ளலாம்.

மேலும், தேசியப் பத்திரிகைகள் மாத்திரமின்றி பிராந்தியப்பத்திரிகைகளையும்உள்ளடக்கியதாகவோ அல்லது பிராந்தியப் பத்திரிகைகளினை தனித்து அடிப்படையாகக் கொண்டோ இதுபோன்ற ஆய்வினை மேற்கொள்ளவும் முடியும்.

**உசாத்துணைகள்**


1. தயா (ஓவியர்). “காலமும் கோலமும்”, ஈழநாதம் வெளியீடு, யாழ்ப்பாணம், 1992.
2. அருணா தர்மலிங்கம். “மக்களின் சிந்தனையை தூண்டவல்ல கேலிச்சித்திரம்”, http://archives.thinakaran.lk/2011/01/04/-art.asp?fn=d1101041&p=1, Retrieved on 05.12.2016, 7.40
3. பயஸ். “காலக்கிறுக்கல்கள்”, நிமலராஜன் ஞாபகார்த்த வெளியீட்டு அமைப்பு, யாழ்ப்பாணம், 2012.
4. சிரித்திரன் சுந்தர். “காட்டூன் ஓவிய உலகில் நான்”, மல்லிகைப்பந்தல் வெளியீடு, கொழும்பு-13, 2001.
5. http://archives.thinakaran.lk/2011/01/04/art.asp?d110141&p=1, Retrieved on 17.12. 2016, 9.15